முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் மார்க்கண்டேயர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

19.10.2018, வெள்ளிக்கிழமை

1. **திருவருள் காட்டிடும் அரங்கனே**
   **தெய்வீகம் வளர்த்திடும் அரசனே**
   **ஆறுமுகன் அவதாரமாக வந்த**
   **அய்யனே ஞான மகா தேசிகனே**
2. தேசிகனே உன் பெருமை கூறி
   தெரிவிப்பேன் ஒளி சூட்சும நூலை
   ஆசிபட **விளம்பி துலை திங்கள்**
   **அறிவிப்பேன் உபயதிகதி புகர் வாரம்**
   **(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 2ம் நாள் 19.10.2018, வெள்ளிக்கிழமை)**
3. வாரமதில் மார்க்கண்டேயர் யானும்
   வழங்கிடுவேன் உலகோர் நலமுற
   சோரமிலா ஞான சமூகத்தை
   சுத்தநெறி கொண்டு உருவாக்கும்
4. உருவாக்கும் அரங்கனே சிறந்த குரு
   உலகம் உய்வுற வகைசெய்யும்
   ஆறுமுகன் சக்தி வடிவான குரு
   அரங்கன் கொள்கை சிறப்பை
5. சிறப்பாக வானவர்களே ஏற்று
   செவி சாய்த்து சூட்சுமமாக
   மறுப்பில்லா துணை புரிய
   மண்ணுலகில் கலிகால மக்களே
6. மக்களே இனியும் காலம் தாழ்த்தா
   மகான் அரங்கன்தனை குருவாய்
   தேக்கமிலா ஏற்று வருக
   தெய்வ பலம் உலகோர் அடைந்து
7. அடைந்துமே ஆறுமுகப்பெருமான்
   ஆசி அருளும் பெறுவதுடன்
   சோடை போகாத வாழ்வும்
   சுபிட்சம் பாதுகாப்பு மனபலம் என
8. என பல்வேறு வல்லமையுடன்
   இணையிலா ஞான சித்தியும்
   தான தருமமும் ஏற்று செய்ய
   தரணியோர் இலகுவாய் அடைவர்

9. அடைவர் அரங்கன் தருமத்தால்
அருள் தயவால் ஆசியால் உயர்வர்
தடைகளென்பதை உடைத்துமே
தன்னார்வ தொண்டு எண்ணம்

10. எண்ணம் வளர்த்து உங்களுள்
எக்காலமும் தன்னம்பிக்கை ஊட்டும்
அண்ணல் அரங்கனே உயர்குரு
ஆபத்தை வெல்லும் சற்குரு

11. சற்குரு மலரடி அகலா தொடர
சங்கடம் இல்லா உயர் நிலை
அற்புதம் கூடி இவை பிறவியே
அணுகுபவரெல்லாம் வீடு பேறடைவர் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் மார்க்கண்டேயர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

தெய்வத்தின் அருளாம் திருவருள் காட்டும் ஆறுமுக அரங்கமகா தேசிகனே தெய்வீகம் வளர்த்து மக்களை காக்கும் ஞானஅரசனே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட அய்யனே ஞானமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலன் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 2ம் நாள் 19.10.2018, வெள்ளிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே மார்க்கண்டேயர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் மார்க்கண்டேயர்.

குற்றமில்லா ஞான சமூகத்தை தூயநெறியைக் கொண்டு உருவாக்கிடும் சற்குரு ஆறுமுக அரங்கமகா தேசிகனே இவ்வுலகின் ஞானகுரு ஆவார். இந்த உலகம் உயர்வு அடைய வகை செய்கின்ற முருகப்பெருமானின் சக்தி வடிவமான ஞானகுரு ஆவார். ஆறுமுக அரங்கன் கொள்கைகளின் சிறப்பினை வானவர்களான தேவர்களும், ஞானிகளும் முழுமனதாய் ஏற்றுக் கொண்டு செவி சாய்த்து சூட்சுமமாக மறுப்பின்றி அரங்கனுக்கு துணைபுரிகின்றனர்.

மண்ணுலகினில் வாழும் கலிகால மக்களே இனியும் காலம் தாழ்த்தாமல் மகான் ஆறுமுக அரங்கமகா தேசிகனை குலகுருவாய் தடையின்றி ஏற்று வழிபாடுகள் செய்து வர, தெய்வபலத்தினை உலக மக்கள் அடைந்து முருகப்பெருமானின் ஆறுமுகப் பெருமானின் ஆசிகளையும் அருளையும் பெறுவதுடன், வீண் போகாத தவவாழ்வினையும், சுபிட்சமான வாழ்வையும், பாதுகாப்பையும், மனோபலத்தையும் பல்வேறு வல்லமையுடன் இணையில்லாத ஞானசித்தியும் தானதருமங்களையும் தடையின்றி உளமார செய்திட்டால் எளிமையுடன் அடைந்து சிறப்படைவார்கள். ஆறுமுக அரங்கனின் தர்மத்தினால் அருள் தயவினால் ஆசியால் உயர்வடைவார்கள்.

உலக மக்களே உங்களுக்கு உண்டான தடைகள் என உள்ளவற்றை உடைத்து தன்னார்வ தொண்டு எண்ணம்தனை உங்களுக்குள் வளர்த்து தொண்டுகளை செய்திடச் செய்து எக்காலமும் உங்களுக்குள் தன்னம்பிக்கை ஊட்டும் அண்ணல் ஆறுமுக அரங்கமகா தேசிகனே உயர்ஞான குரு ஆவார், ஆபத்துகளை வென்று உலகோரை காக்கும் சற்குரு ஆவார்.

எல்லா ஆபத்துகளையும் வென்று காக்கும் சற்குரு ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் மலரடியை விட்டு அகலாமல் தொடர்ந்து பின்பற்றி வரவர, அவர்களுக்கு சங்கடம் இல்லாத உயர்நிலையும் அற்புதங்களும் அதிகமாகி இந்த பிறவியிலே வீடு பேற்றினை அடைந்து சிறப்படைவார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் மார்க்கண்டேயர்.

–சுபம்–